18.07.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 43/2021</u>

அ.சா.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவபாலன் | | |
| த/பெ | கலியமூர்த்தி | | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 42/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** புதுவை மாநிலம் ஏரிப்பாக்கத்தில் உள்ள எம்ஆர்எப் கம்பெனியில் பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ராஜ்கிரன் எங்கள் ஊரை சேர்ந்தவர். அவரை எனக்கு தெரியும். ராஜ்கிரனின் அம்மா வாசுகியை எனக்கு தெரியும். எனக்கு 1ம் எதிரி தீபக் (எ) தீபக்ராஜ், 2ம் எதிரி சசி (எ) கஸ்தூரி, 3ம் எதிரி கலா ஆகியோர்களையும் ஆஜரில் உள்ள 4ம் எதிரியையும் எனக்கு தெரியாது. ராஜ்கிரன் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். ராஜ்கிரன் இறந்து 2 வருடங்களுக்கு மேல் ஆகிறது. ஆனால் அவர் எவ்வாறு இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர் இறப்பு குறித்து போலீசார் என்னை எதுவும் விசாரணை செய்யவில்லை. காவல் துறையினர் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை

என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் அ.சா.1 வாசுகி எனக்கு சித்தி முறை என்றும், அவரது மகன் ராஜ்கிரன்

கொத்தாம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த எட்டியான் மகள் சசி (எ) கஸ்தூரியை சம்பவத்திற்கு 6 வருடத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு ரீகன், பிரியன் என்ற இரண்டு குழந்தைகள் இருந்தது என்றும், சசி (எ) கஸ்தூரி வேறு ஒரு நபருடன் கள்ளத்தொடர்பு இருந்து கொண்டு சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு குழந்தைகளை விட்டுவிட்டு ஓடி விட்டார் என்றும், குழந்தைகளை ராஜ்கிரன் தான் வளர்த்து வந்தார் என்றும், சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கஸ்தூரி தன் கணவரை விட்டுவிட்டு வந்துவிட்டார் என்றும், இருப்பினும் அடிக்கடி அவர்களுக்குள் சண்டை நடந்ததாகவும், அப்போது சில நபர்கள் அவர்கள் வீட்டிற்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

இந்நிலையில் கடந்த 13.04.2019 ம் தேதி காலை 6 மணியளவில் பள்ளிநேலியனூர் இரயில்வே கேட்டில் இருந்து புதுச்சேரி ரோட்டில் உள்ள இரயில் பாதையில் ராஜ்கிரன் பிணமாக கிடப்பதாக அவரது அம்மா வாசுகி தனக்கு தகவல் தெரிவித்தார் என்றும், நானும் அவரும் மற்றும் உறவினர்கள் சகிதம் ராஜ்கிரனின் பிரேதம் கிடந்த இடத்தை சென்று பார்த்தோம் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்லல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை**

இல்லை